**இலங்கை மாநாட்டுப் பணியகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பணியகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பணியகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பணியகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பணியகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பணியகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பணியகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல: 01 இன் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படக்கூடாத போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட காசு மீதிக்கு | சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிராக ரூபா 1,861,137 தொகையான வங்கி மேலதிகப்பற்று ஈடுசெய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான காசு மீதி நிதிக்கூற்றுக்களில் அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டளவில் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள ரூபா 6,700,000 கிரயமான மோட்டார் வாகனத்தின் பயன்தரு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | என்சீ 1458 என்ற மோட்டார் வாகனத்தின் திருத்தம் இன்னும் பூர்த்தி செய்யப்படாததால், அதன் பயன்தரு ஆயுட்காலத்தை தற்போது மீளாய்வு செய்ய முடியாதுள்ளது. திருத்தம் பூர்த்தியடைந்த பின்னர் பயன்தரு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்குதல் வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| பெற வேண்டிய கணக்குகள் | | | | | |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை | 31,997,283 | 0 | 31,997,283 | இலங்கை சுற்றுலா அதிகாரசபையின் இறுதி TDL மற்றும் Embarkation அறிக்கையின் பிரகாரம் இலங்கை மாநாட்டு பணியகத்திற்கு செலுத்தப்பட்ட தொகையாக ரூபா 31,997,283 காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இலங்கை மாநாட்டு பணியகத்தின் நிதிக்கூற்றுக்களிற்காக இத் தொகை எடுக்கப்பட்டிருந்தது. அதிகாரசபைக்கு பெற வேண்டிய ரூபா 103,260 தொகைக்கு எமது நிறுவனத்திற்கு விலைப்பட்டியல்கள் எதுவும் கிடைத்திருக்கவில்லை. | தொடர்புடைய தரப்பினர்களிற்கிடையே கணக்குகளை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை ரூபா | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறைச் சட்டத்தின் VIII ஆம் அத்தியாயத்தின் 42 ஆம் பந்தியின் (ஆ), (உ) மற்றும் (ஏ) உபபிரிவு<br>சுற்றுலாத் துறையில் ஒரு இடமாக இலங்கையின் சந்தைப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட பொதுவான கொள்கையொன்றை வழங்குதல், மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் போன்றவற்றைக் கையாள்வதில் ஈடுபட்டுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு தொழில்சார் நியமங்களை பரிந்துரைத்தல் மற்றும் இலங்கையை ஒரு சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்கு ஊக்குவிப்பு பணியகத்திற்கு வழிகாட்டலை வழங்குதல் ஆகிய பணியகத்தின் நோக்கங்கள் மீளாய்வாண்டு வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | - | இலங்கை சுற்றுலா அதிகாரசபையின் ஊடாக MICE ஊக்குவிப்பில் ஈடுபடும் நிறுவனங்களுக்கான வழிகாட்டல்களை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அந்த நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன. சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி MICE பயிற்சிக்கான முதன்மை மையமாக இலங்கையை மேம்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையுடன், சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு, இலங்கை சுற்றுலா அதிகாரசபையுடன் வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு, அச் செயற்பாட்டு செயன்முறையை வெற்றியடையச் செய்வதற்கு சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்துடன் இணைந்து செயற்பட்டது. கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் அவ்வப்போது வரிசையில் நடத்தப்பட்டன. | சட்டத்துடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம்<br>-----------------------------------------------------<br>2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் திறைசேரி அங்கீகாரங்களின்றி ரூபா 118,000,000 குறுங்கால முதலீடு மற்றும் ரூபா 32,000,000 நீண்ட கால முதலீடு என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 150,000, 000 | பதில் வழங்கப்படவில்லை. | நிதி அதிகாரச்சட்டத்துடன் இணங்குதல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பந்தி<br>-----------------------------------------------------<br>படிவம் 190 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைக்காக பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டிய போதிலும், பணியகத்தால் விடுமுறைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | - | Biometric சாதனம் ஒன்றின் மூலம் ஊழியர் வருகை, வெளிச்செல்லல் ஆகியவற்றைப் பதிவுசெய்து, அந்த முறைமையில் இருந்து ஊழியர்களால் எடுக்கப்பட்ட விடுமுறை தொடர்பான அறிக்கை பெறப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், தாபன விதிக்கோவையின் படிவம் 190 இன் பிரகாரம் ஊழியர்களின் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை விபரங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட எக்செல் (excel) ஆவணம் ஒன்று பேணப்படுகிறது. | தாபன விதிக் கோவையுடன் இணங்குதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,133,911 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 21,892,451 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 35,026,362 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. சுற்றுலா அபிவிருத்தி வரியிலிருந்தான வருமானம் ரூபா 11,014,112 ஆல் அதிகரித்தமை மற்றும் சந்தைப்படுத்தல் செலவினம் ரூபா 30,778,520 ஆல் குறைவடைந்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன.